# வாழ்வாதார சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வறுமையைப் படமாக்கலும் மதிப்பிடலும் – பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

## Mapping and Evaluation of Poverty Based on Livelihood Assets: Based on Selected Grama Sevakar Divisions in Pachchilaippalli Divisional Secretariat

சுபதாரணி கேதீஸ்வரநாதன்[1] & சுபாஜினி உதயராசா[2]

[1]யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
[2]சிரேஸ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்
kjss2729@gmail.com, usubageo@gmail.com

**01. ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய நவீன உலகில் மனித வாழ்வியல் நெருக்கடிகளில் மிகப் பெரும் அச்சுறுத்தலாக வறுமை என்பது காணப்படுகின்றது. வாழ்வாதாரச் சொத்துக்களில் ஏற்படும் குறைபாட்டு நிலையே வறுமையை தோற்றுவிக்கிறது. ஆய்வுப்பிரதேசத்தில் அதிகளவிலான மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளனர். இன்றைய பொருளாதார நெருக்கடி இப்பகுதி மக்களை பாரியளவில் பாதித்துள்ளது. வறுமையை சரியான முறையில் மதிப்பிட்டு அதனை ஒழிக்க வேண்டியது மிக அவசியமானதாக உள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் நிலவும் வறுமையை வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் அளவீடு செய்து அதனை படமாக்கி காட்டுவதை இலக்காக கொண்டு வாழ்வாதாரச்சொத்துக்களை அளவிடுவதற்கான கட்டளைக்கற்களை அடையாளம் கண்டு வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலினை படமாக்குவதன் ஊடாக வாழ்வாதாரச் சொத்துக்களிற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பை மதிப்பீடு செய்து வறுமை ஒழிப்பை துரிதப்படுத்துவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் (KN/82, KN/86/, KN/91, KN/96), இரண்டாம் நிலைத்தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு வினாக்கொத்து மற்றும் நேரடி அவதானிப்புக்கள் மூலம் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு வகைப்படுத்தப்பட்டு புவியியல் தகவல் ஒழுங்கு செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு படமாக்கப்பட்டது. பின்னர் அவை பல்நியம பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு வாழ்வாதார மூலதனங்கள் தனித்தனியாக படமாக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் வாழ்வாதாரச் சொத்துப்படமும் வறுமைப்படமும் புவியியல் தகவல் ஒழுங்கு நுட்பமுறைமூலம் (GIS) பகுப்பாயப்பட்டு பெறுபேறுகள் பெறப்பட்டன. குறித்த கிராம சேவகர்பிரிவுகளுக்குமான வாழ்வாதாரச் சொத்துக்கள் மற்றும் வறுமைப்படங்கள் ஐவகையான மட்டங்களில் மதிப்பிடப்பட்டு வறுமைக்கான காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் வாழ்வாதாரச் சொத்துக்களிற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்புகள் மற்றும் இடைவெளிகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன. இதன்மூலம் வெவ்வேறு கிராம சேவகர் பிரிவுகளிலும் வறுமையிலும் வாழ்வாதார மூலதனங்களிலும் காணக்கூடிய ஏற்ற இறக்கங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கான காரணங்களும் ஆராயப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது வறுமையின் இருப்பை அறியவும் அதனை ஒழிக்க சிறந்த திட்டம் மேற்கொள்ளவும், பிரதேச அபிவிருத்தி கொள்கை வகுப்பளர்களிற்கும், திட்டமிடலாளர்களிற்கும் பயனுள்ளதாக அமையும். இது புதிய அபிவிருத்திச் சித்தனைகளை தோற்றுவிப்பதுடன் வறுமை ஒழிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி வாழ்வாதார மேம்பாடுடைய சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக அமையும்.

திறவுச் சொற்கள்: வாழ்வாதாரம், பிரதேச செயலர்பிரிவு, கிராமசேவகர்பிரிவு, வறுமை

**02. ஆய்வு அறிமுகம்**

நவீன உலகின் வாழ்வியல் நெருக்கடிகளுள் மிகத்தீவிரமடைந்து இருப்பது வறுமைப்பிரச்சனையாகும். வாழ்வாதாரச் சொத்துக்களில் ஏற்படும் குறைபாட்டு நிலையே வறுமையை தோற்றுவிக்கிறது. (Ahamad Labble et al; 2000). இலங்கையில் அதிகளவிலான வறுமைச்சுட்டென் கொண்ட மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது குறிப்பாக 18.2% மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர். (சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2017).வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவையைப்பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்க்கு அடிப்படையாக அமையும் இயற்கை, சமூக, பௌதிக, மானிட, மற்றும் நிதி மூலதனம் ஆகிய ஐந்து சொத்துக்களில் தங்கியுள்ளது (சுபாஜினி உ., சுதாகர் க., 2015). வறுமையின் இடம்சார் பரிமாணத்தினை காட்சிப்படுத்தும் ஒரு பிரபல்யமான வழிமுறையாக வறுமை பற்றிய படமானது இப்பொழுது காணப்பட்டு வருகின்றது. ஆய்வுப்பிரதேச வாழ்வாதாரமானது மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் உள்ளாகியுள்ளது இதனால் கணிசமான அளவு மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர்.

இந்த வகையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகபிரிவில் தெரிவுசெய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும், அதற்கான காரணங்களையும் ஆராய்வதாகவே இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**03. ஆய்வுப் பிரச்சினை**

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கிராமிய வறுமை ஒரு பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் அரச, தனியார் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்ட போதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் அடையாத நிலையை காணக்கூடியதாக உள்ளது.

வறுமையானது பல்வேறு மூலதனங்கள் சார்ந்து காணப்படுவதால் வறுமைக்குட்பட்ட மக்கள் சரியானமுறையில் இணங்காணப்படவில்லை இதனால் இப்பகுதி மக்களிடையே தொடர்ந்தும் வறுமை நிலவி வருகின்றது. இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட வறுமை தொடர்பான ஆய்வுகள் அனைத்தும் வருமான மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்க்கொள்ளப்பட்டவையாகக் காணப்படுவதால், வாழ்வாதாரத்துடனான வறுமை பற்றிய ஆய்வு அவசியமானதாகக் காணப்படுகின்றது. கிராமிய வறுமையானது சமூக, பொருளாதர அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. இதற்கிணங்க வறுமை மற்றும் அதனுடைய சமூக, பொருளாதாரப் பாதிப்புக்களை அறிதலானது இன்று மிகத் தேவைப்பாடுடைய ஒன்றாகக் காணப்படுகின்றது.

### 04. ஆய்வின் நோக்கம்

**பிரதான நோக்கம்**

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட மக்களின் வறுமையினை வரைபடமாக்களும், மதிப்பிடலும்.

**துணைநோக்கங்கள்**

- வாழ்வாதார சொத்துக்களை அளவிடுவதற்கான கட்டளைக்கற்களை அடையாளம் காணல்.
- ஆய்வுப்பிரதேச மக்களின் வாழ்வாதார சொத்துக்களின் இடம்சார் பரம்பலை படமாக்கலும் மதிப்பிடலும்.
- வாழ்வாதாரச் சொத்துக்களிற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பிடல்.
- வறுமை இடம்சார் ரீதியாக வேறுபடுவதற்கான காரணங்களை கண்டறிதலும் அதற்கான தீர்வுகளை முன்வைத்தலும்.

### 05. ஆய்வின் மட்டுப்பாடுகள்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளினை அடிப்படையாகக் கொண்ட இவ் ஆய்வானது சில வரையறைகளிற்கு உட்பட்டது. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 18 கிராம சேவகர் பிரிவுகள் காணப்பட்ட போதும் இவ் ஆய்விற்காக நான்கு கிராம சேவகர் பிரிவுகள் சார்ந்த தரவுகள் மட்டுமே பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேச மக்களிடையே மற்றும் வாழ்வாதாரச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் உள்ளானதுடன் மக்களிடமிருந்து முதலாம்நிலைத்தரவுகள் ஒழுங்கான மாதிரியெடுப்பு முறைமூலம் 10% பிரதிநிதித்துவப்படுத்துவதாக மட்டுமே அமைந்தது.

### 06. இலக்கிய மீளாய்வு

இவ் ஆய்விற்காக பல இலக்கிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வின் வரையறை கருதி மிக முக்கியமாக இவ்ஆய்விற்கு பயனுடையதாக அமைந்த ஒருசில இலக்கிய மீளாய்வுகள் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன Subajini, Suthakar, (2015), என்பவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ''வாழ்வாதார சொத்துக்களை அடையாளப்படுத்தி அவற்றின் இடம்சார் பாங்கினை படமாக்குவதன் ஊடாக வறுமையின் இடம்சார் பரம்பலை அறிதல்''. (ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவினை சிறப்பாகக்கொண்டது) என்ற ஆய்வானது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாழ்வாதாரச்சொத்துக்களை அடையாளப்படுத்தி அவற்றின் இடம்சார் பாங்கினை படமாக்குவதன் மூலம் வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம்சார்ந்த பரம்பலை அறிவதே இவ்ஆய்வின் நோக்கமாகும். முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அத்தரவுகள் Arc GIS தொழில்நுட்பம் மூலம் இருபத்தேழு கிராமசேவகர் பிரிவின் வாழ்வாதார சொத்துக்கள் அடையாளப்படுத்தி படமாக்கப்பட்டு வறுமை மதிப்பிடப்பட்டுள்ளது எனவே வாழ்வாதார சொத்துக்களின் சமனற்ற பரம்பலே வறுமைக்கான காரணம் என அடையாளப்படுத்தப்பட்டு வாழ்வாதார சொத்துக்கள், வறுமை என்பவற்றுக்கான இடைத்தொடர்பு இவ் ஆய்வின் மூலம் அறியமுடிந்தது. எனவே இவ் ஆய்வின் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட வாழ்வாதாரக்குறிகாட்டிகள் இவ் ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டது.

சுபாஜினி உதயராசா, என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ''மீள்குடியேற்றத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பிரச்சனைகள்'' (ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவினை சிறப்பாக கொண்டது). இவ் ஆய்வானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இம்மக்களின் வாழ்வாதாரம் தொடர்பான விடயங்களில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் கண்டறிவதோடு அப்பிரச்சனைகளுக்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைப்பதே இவ் ஆய்வின்நோக்கமாகும். இங்கு முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளினை அடிப்படையாகக்கொண்டு தரவுசேகரிப்பு மேற்கொள்ளப்பட்டு குறித்த பிரதேச மக்களின் பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டது. அவற்றுக்கான தீர்வுகளும் கொடுக்கப்பட்டு பிரச்சனைகளை ஓரளவேனும் தீர்ப்பதாக இவ் ஆய்வு அமைந்தது. எனவே இவ் ஆய்வின் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட வாழ்வாதாரக் குறிகாட்டிகள் இவ் ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டது. மேலும் தரவு பகுப்பாய்வு முறையும் பயன்படுத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட இலக்கிய மீளாய்வுகளின் மூலம் இவ்ஆய்விற்குத் தேவையான தரவு சேகரிப்பு நுட்பங்கள் பகுப்பாய்வு முறைகள்


### 07. ஆய்வு முறையியல்

### 7.1 ஆய்வுப்பிரதேசம்

இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசம் இலங்கையின் வட மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளாக காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் வடபகுதியில் அமைந்துள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவு சிறப்பான நீர்வளம், நிலவளம், மற்றும் மனிதவளம் பொருந்திய ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசமானது 167.7 சதுர கிலோமீற்றர் விஸ்தீரணமான நிலப்பரப்பினை கொண்டுள்ளது. அதன் எல்லைகளாக,

வடக்கு- வடமராட்சி கிழக்கு பிரதேச செயவாளர் பிரிவு
கிழக்கு- வடமராட்சி கிழக்கு மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவும்
தெற்கு- கண்டாவளை புநகரி பிரதேச செயலாளர் பிரிவும்
மேற்கு- தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவும் காணப்படுகின்றது. அப்பிரதேசங்களுக்குள் இடைப்பட்ட பிரதேசங்களுக்குள் பச்சிலைப்பள்ளி பிரதேசம் அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது 2020

### 7.2 தரவுகளும் பகுப்பாய்வு முறைகளும்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவில் வாழ்வாதாரச்சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் பரிமாணத்தை அளவிடுவதற்கு GIS தொழில்நுட்பத்தின் உதவியுடன் படமாக்கலானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு படமாக்கலை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு வாழ்வாதாரச்சொத்துக்களிற்கும் நிறை கொடுக்கப்பட்டு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக படமாக்கலானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக குறித்த கிராமசேவகர் பிரிவுகளில் Shape file எடுக்கப்பட்டு Attribute Table உருவாக்கப்பட்டது. இதனைவிட வாழ்வாதாரச்சொத்துக்களின் இடம்சார் பரம்பலின் அடிப்படையில் வறுமையின் பரிமாணத்தினை அறிந்து அல்லது அளவிட்டுக்கொள்வதற்கு முதல் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள்தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு முறைக்குட்பட்டு ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டுள்ளன.


### 7.3 தரவுப்பகுப்பாய்வு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பகுதியில் மேற்கொள்ளப்படும் இவ் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட புள்ளி விபர தரவுகள் GIS தொழில் நுட்பத்தைப் பிரயோகித்து பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன. ArcGIS இனைப்பயன்படுத்தி வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலினைக் கண்டறிந்து அதனைப் படமாக்கி வறுமையின் பரிணாமத்தினையும் அதன் தன்மைகளினையும் கண்டறிய பல்பரிமாணப் பகுப்பாய்வு (Spatial multy criteria analysis) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப் பகுப்பாய்வின் ஆரம்பச் செயன்முறையாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளின் நெய்யரிப்படத்தினை (Vector Map) பெற்றுக்கொள்ளும் செயற்பாடு

காணப்பட்டது. ArcGIS இன் 10 Version ஊடாக ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிற்குமான வாழ்வாதாரக் கட்டளைக் கற்களிற்கான தரவுகளானவை Attribute Table இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

Attribute Table இல் பதிவு செய்யப்பட்டுள்ள வாழ்வாதாரச்சொத்துக்களின் கட்டளைக்கற்கள் ஒவ்வொன்றும் Raster operation Clhf Attribute map மூலம் படமாக்கப்பட்டுள்ளன. பின்னர் இடம்சார் பல்பரிமாணப் பகுப்பாய்வினூடாக செயன்முறைக்கு (Spatial Multi criteria analysis) உட்படுத்தப்பட்டுள்ளது. Attribute table உட்செலுத்தப்பட்ட தரவுகளானவை கட்டளைக்கற்களுக்கு ஏற்ப ஒவ்வொரு மூலதனங்களுக்கும் நியமப் பெறுமானம் (Standardize value) கொடுக்கப்பட்டு கட்டளைக்கற்களின் அடிப்படையில் அதிக வறுமையை ஏற்படுத்தும் கட்டளைக் கற்களுக்கு 1 என்ற அடிப்படையிலும், குறைந்த வறுமையினை ஏற்படுத்தும் கட்டளைக் கற்களிற்கு 4 என்ற அடிப்படையிலும் பெறுமானம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டளைக் கற்களிற்கும் நிறை கொடுக்கப்பட்டது. வறுமையானது ஏற்படுவதற்கு எந்த கட்டளைக்கல் அதிக பங்களிப்பு செய்கின்றதோ அதனடிப்படையில் தரப்படுத்தப்பட்டு நிறை கொடுக்கப்பட்டுள்ளது. எந்த காரணிகளில் வறுமை முதன்மையானதாகக் காணப்படுகின்றதோ அதனடிப்படையில் நிறை கொடுக்கப்பட்டு வறுமை தொடர்பான இடம்சார் ரீதியிலான பரம்பல் படம் (Poverty distribution map) தயாரிக்கப்பட்டுள்ளது.




**08. வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பலும் வறுமை மதிப்பீடும்.**

வாழ்வாதாரச் சொத்துக்களை அடிப்படையாகக்கொண்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப்பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் வறுமை மதிப்பீடு தொடர்பான ஆய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டதுடன் வாழ்வாதாரச்சொத்துக்கள் மற்றும் வறுமை தொடர்பான பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன.

இவ் ஆய்வுப்பிரதேசத்தில் வறுமையை அடையாளப்படுத்திக் கொள்ள அங்கு காணப்படுகின்ற சமூக, பொருளாதார, பௌதிக, இயற்கை மற்றும் மனித மூலதன நிலைகளின் பின்னடைவானது பிரதான காரணியாகின்றது. அந்த வகையில் எவ் எவ் பரிமாணங்களில் எத்தகைய தாக்கங்களை வறுமை கொண்டுள்ளது என்பதனை ஒரு சில காரணிகளை வைத்து அடையாளப்படுத்த முடியாது. வறுமையின் பரிமாணங்கள் மாற்றமடைந்து செல்லும் நிலையில் ஆய்வுப் பிரதேசத்தின் வறுமைக்கான காரணங்களில் அதிகளவான தாக்கம் செலுத்தும் காரணிகள் மட்டும் எடுத்துக்கொண்டு வாழ்வாதாரச் சொத்துக்களில் வறுமையின் இடம் சார் பரிமாணமானது GIS துணையுடன் வரைபடமாக்கப்பட்டுள்ளது. வறுமையில் தாக்கம் செலுத்தும் குறிகாட்டிகள் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொரு குறிகாட்டிகளினதும் புள்ளிவிபரத்தரவுகள் தம்பகாமம் KN/86, சோறன்பற்று KN/82, அரசர்கேணி KN/91, இத்தாவில் KN/92, ஆகிய 04 கிராமசேவகர் பிரிவு ரீதியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு Attibute Table இனுள் உள்ளீடு செய்யப்பட்டு செய்முறைப்படுத்தப்பட்டு வரைபடங்களாக்கப்பட்டன. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் ஒரு குறிகாட்டியானது எவ்வாறு பரம்பிக்காணப்படுகின்றது என்பதனை இவ் வரைபடங்கள் விளக்குகின்றன.

### 8.1 பௌதிக மூலதனத்தின் இடம்சார் பாங்கு

இவ்வகையில் பௌதிக மூலதன கட்டளைக் கற்களாக, நிரந்தர வீடுகள், தற்காலிக வீடுகள், மின்சார வசதியற்ற வீடுகள், மலசலகூட வசதியற்ற வீடுகள், அரைநிரந்தர வீடுகள், குடிசைவீடுகள், என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப் பௌதிக மூலதன அளவீட்டு முறைமைகளானவை ஆய்வுப் பிரதேசத்தின் வறுமையில் அதிகளவு செல்வாக்கு செலுத்துவனவாகவும் பௌதிக மூலதனப் பற்றாக்குறைக்கு ஏதுவாகவும் வாழ்வாதார நிலைமைகளின் பின்னடைவுக்கும் ஏதுவான விடயங்களாகக் காணப்பட்டன.

ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த குடும்பங்களில்(1198 ) 103 குடும்பங்கள் குடிசை வீடுகளிலேயே வாழ்கின்றனர். உயர்வான அளவில் இத்தாவில் KN/92, 38% மான குடும்பங்களும்இ அரசர்கேணி KN/91, 36% மான குடும்பங்களும் சோறன்பற்று KN/82, 7% மான குடும்பங்களும், மிக குறைவான அளவிலும் தம்பகாமத்தில் KN/86, 19% மான குடும்பங்கள் நடுத்தர அளவிலும் குடிசை வீடுகளில் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.


சோறன்பற்று (KN/82) 40% மான குடும்பமும், தம்பகாமம் (KN/86) 32% மான குடும்பமும் உயர்வான மலசலகூட வசதியற்ற நிலையில் அரசர்கேணி (KN/91), 15% மான குடும்பமும், இத்தாவில் (KN/92) 13% மான குடும்பமும் நடுத்தர அளவிலும், குறைந்த அளவிலும் மலசலகூட வசதியற்ற நிலையில் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சோறன்பற்று (KN/82,) 20மூ மான குடும்பங்களும், அரசர்கேணி (KN/91) ,19% மான குடும்பங்களும் நிரந்தரவீட்டில் மிகக் குறைந்த அளவிலே வாழ்கின்றனர். இதன் அடிப்படையில் வறுமை மிக உயர்வாக இங்கு காணப்படுகின்றது. இத்தாவில் (KN/92), 21% மான குடும்பங்கள் நடுத்தர அளவிலும் தம்பகாமத்தில் KN/82, 40% மான குடும்பங்கள் மிக உயர்ந்த அளவிலும் நிரந்தர வீடுகளில் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசர்கேணி (KN/91), 35% மான குடும்பம் தற்காலிக வீடுகளில் வசிப்பவர்களாகவும், இங்கு உயர்வான வறுமை நிலவுவதாகவும் காணப்படுகின்றது அத்துடன் தம்பகாம் (KN/86) 17% மான குடும்பமும், சோறன்பற்று (KN/82), 10% மான குடும்பமும் நடுத்தர அளவிலும், குறைந்த அளவிலும் தற்காலிக வீடுகளில் வசிப்பவராக காணப்படுகின்றது.

அரைநிரந்தர வீடுகளில் தம்பகாமம் (KN/86) 10% மான குடும்பமும் அரசர்கேணி (KN/91), 21% மான குடும்பமும் மிகஉயர்வான உயர்வான வறுமைக்கு உட்பட்டர்களாக நிலவுகின்றனர். அத்துடன் இத்தாவில் (KN/92) 26% சோறன்பற்று (KN/82), 42% மான குடும்பமும், நடுத்தர அளவிலும், குறைந்த அளவிலும் அரைநிரந்தர வீடுகளில் வசிப்பவராக காணப்படுகின்றர்.

இவ்வகையில் பௌதிக மூலதன கட்டளைக்கற்கள் ஒவ்வொன்றையும் அடிப்படையாகக் கெண்டு பௌதிக மூலதன இடம்சார் பரம்பல் படத்தில்(உரு-7.1) காட்டப்பட்டுள்ளவாறு உயர்வான வறுமை(High Poverty) காணப்படும் பகுதிகளான அரசர்கேணி (KN/91), இத்தாவில் (KN/92) என்பனவும், சோறன்பற்று (KN/82) இதம்பகாமம் (KN/86) ஆகியன மிதமான வறுமை(Moderate Poverty) கொண்ட கிராம சேவகர் பிரிவுகளாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன.




(உரு-8.1)

இவ்வாறாக பௌதிக மூலதனத்தின் குறிகாட்டிகளின் பரம்பல் தன்மை அமைந்திருப்பதுடன் ஒவ்வொரு குறிகாட்டிகளின் பரம்பல் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு வறுமையும் மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றம் நடைபெற்ற போதிலும் பல்வேறுபட்ட காரணங்களினால் மக்கள் எல்லாப்பிரதேசங்களிலும் பௌதிக மூலதனத்தை சம அளவில் பெறமுடியவில்லை.

**8.2 மனித மூலதனத்தின் இடம்சார் பாங்கு**


மனித மூலதனக்கட்டளைக்கற்களாக விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை, பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை, வேலையற்றோர் எண்ணிக்கை, கூலிவேலை செய்வோர் எண்ணிக்கை, தங்கிவாழ்வோர் எண்ணிக்கை, ஊனமுற்றோர் எண்ணிக்கை, ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை, என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன. பெண்தலைமை தாங்கும் குடும்பங்களை நோக்கும் போது தம்பகாமத்தில் (KN/86), 36% மானதாகவும்இ இத்தாவில் (KN/92), 29% மானதாகவும், சோறன்பற்று (KN/82), 19% மானதாகவும், அரசர்கேணி (KN/91), 16% மானதாகவும் நடுத்தர அளவிலும், குறைவான அளவிலும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் வாகின்றமை குறிப்பிடத்தக்கது.

சோறன்பற்று (KN/82), 53% மானவர்கள் வேலையற்ற நிலையில் மிக உயர்வான வறுமைக்குட்பட்டவர்களாகவும், இத்தாவில்(KN/92),20% மான வேலையற்றவர்களும், உயர்வான வறுமைக்கு உட்பட்டவர்களாகவும், அரசர்கேணி (KN/91), 15% மானவர்களும், தம்பகாமத்தில் (KN/86),12% மானதாகவும் நடுத்தர அளவிலும், குறைவான அளவிலும் வேலையற்றவர்களாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தம்பகாமத்தில் (KN/86), 53% மான கூலிவேலை செய்வோராகவும், மிகஉயர்வான வறுமையிலும், சோறன்பற்று (KN/82), 33% மானவர்கள் உயர்வான அளவில் கூரிவேலை செய்வோராகவும், இத்தாவில் (KN/92), 11% மானதாமானதாகவும் அரசர்கேணி (KN/91), 3% மானதாகவும் நடுத்தர அளவிலும், குறைவான அளவிலும் கூலிவேலை செய்வோர் குடும்பங்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தம்பகாமத்தில் (KN/86), 45% மானவர்கள் ஊனமுற்றவர்களாகவும் மிக உயர்வான வறுமைக்கு உரியவர்களாகவும் காணப்படகின்றனர் ஏனெனில் இங்கு ஒப்பீட்டளவில் சனத்தொகை செறிவு ஒப்பீட்டளவில் அதிகமாகவும் அங்க இழப்புக்களின் காரணமாக மனித மூலதனம் முடக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சோறன்பற்று (KN/82) 23% மானவர்கள் உயர்வான எண்ணிக்கையில் ஊனமுற்றவராகவும், இத்தாவில் (KN/92),20% மானவர்கள், அரசர்கேணி (KN/91),12s% மானவர்கள் நடுத்தர அளவிலும், குறைவான அளவிலும் ஊனமுற்றவர்கள் காணப்படுகின்றனர்.

விவசாயமே ஆய்வுப்பிரதேசத்தின் பிரதான அம்சமாகக் காணப்படுகின்றது. ஆகையால் விவசாயக்குடும்பங்களின் எண்ணிக்கை மிக உயர்வானதாகவே காணப்படுகின்றது (79%). விவசாயம் என்பதனுள் வீட்டுத்தோட்டம், தென்னைச்செய்கை, மேட்டுநிலப்பயிர், பனை வளர்ப்பு என்பன இங்கு உள்ளடங்குகிறது. குறிப்பாக சோறன்பற்று (KN/82), 56%, தம்பகாமத்தில் (KN/86), 30% மான குடும்பங்களும், இத்தாவில் (KN/92), 8% மான குடும்பங்களும், அரசர்கேணி (KN/91), 13% மான குடும்பங்களும் விவசாயத்தில் பங்கு பற்றுகின்றனர். இவ்வகையில் மனித மூலதன கட்டளைக்கற்கள் ஒவ்வொன்றையும் அடிப்படையாகக் கெண்டு மனித மூலதன இடம்சார் பரம்பல் படத்தில் (உரு-7.2) காட்டப்பட்டுள்ளவாறு உயர்வான வறுமை (High Poverty) காணப்படும் பகுதிகளான சோறன்பற்று (KN/82) தம்பகாமம் (KN/86), என்பனவும் அரசர்கேணி (KN/91), இத்தாவில் (KN/92) ஆகியன மிதமான வறுமை (Moderate Poverty) கொண்ட கிராம சேவகர் பிரிவுகளாகிவும் காணப்படுகின்றன.




உரு 8.2

### 8.3 இயற்கை மூலதனத்தின் இடம்சார் பாங்கு

ஆய்வுப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட இயற்கை மூலதனக்குறிகாட்டிகளாக தனியார் கிணறுகள், விவசாய நிலப்பரப்பளவு (ஹெக்டேயர்), ஏனைய பயிரச்செய்கை நிலப்பரப்பளவு (ஹெக்டேயர்), பொதுக்கிணறுகளின் எண்ணிக்கை, கிணறு இல்லாதவர்களின் எண்ணிக்கை என்பன உள்ளடங்குகின்றன. இவ் இயற்கை மூலதனக் குறிகாட்டிகளின் சமமற்ற பரம்பலும், மக்களின் வேறுபட்ட வாழ்வியல் நடவடிக்கைகளும் வறுமைக்கு காரணமாக அமைகின்றது.


வறுமை நிமித்தம் சில கிராமசேவகர் பிரிவுகளில் தங்கள் வீடுகளுக்கான சொந்தக்கிணறுகளை வைத்திருக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. அதனடிப்படையில் 12% மானவர்ளே சொந்தக்கிணறுகளை வைத்துள்ளனர். மிக உயர்வான எண்ணிக்கையில் அரசர்கேணியில் (KN/91), 48% மானதும், உயர்வான அளவில் சோறன்பற்றில் (KN/82), 27%, மானதும் தனியார் கிணறுகள் காணப்படுகின்றது, இத்தாவில் (KN/92), 18% ஆகவும்இ தம்பகாமத்தில் (KN/86), 7% மாகவும் நடுத்தர மற்றும் குறைந்த அளவில் தனியார் கிணறுகள் காணப்படுகினறன. இங்கு குடிநீர் தேவையைப்பெற்றுக்கொள்ள மக்கள் சிரமமப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விவசாய நிலப்பரப்பளவு (ஹெக்டேயர்) தொடர்பாக நோக்கும் பெழுது, விவசாய நிலப்பரப்பளவு சற்று உயர்வாகவே காணப்படுகின்றது. குறிப்பாக சோறன்பற்றில் (KN/82), மிக உயர்வான அளவிலும், அரசர்கேணியில் (KN/91), உயர்வான அளவிலும், விவசாய நிலம் காணப்படுகிறது. இதனால் இப்பகுதிகளில் மக்கள் விவசாயத்தை மேற்கொள்வதற்கும் வருமானத்தைப்பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பாக அமைகின்றது. எனினும் இத்தாவில் (KN/92), 16% மானதும், தம்பகாமத்தில் (KN/86), 8% மானதுமான விவசாய நிலப்பரப்பளவு காணப்படுகின்றது. இங்கு விவசாயம் சார் வறுமை நிலவுகின்றமையை அவதானிக்கலாம்.

ஆய்வுப்பிரதேசத்தில் 20% மானவர்கள் கிணறுகள் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர், இத்தாவில் (KN/92), 46% மான மிக உயர்வாகவும், தம்பகாமத்தில் (KN/86), 23% மான உயர்வான அளவிலும் கிணறுகள் இல்லாதவர்கள் காணப்படுகின்றனர். அரசர்கேணி (KN/91), 16% மானதும், சோறன்பற்று (KN/82), 14%, மாகவும் நடுத்தர மற்றும் குறைந்த அளவில் கிணறுகள் இல்லாதவர்கள் காணப்படுகின்றனர்.

இயற்கை மூலதன கட்டளைக்கற்கள் ஒவ்வொன்றையும் அடிப்படையாகக் கொண்டு இடம்சார் பரம்பல் படத்தில்(உரு-7.3) காட்டப்பட்டுள்ளவாறு மிக உயர்வான வறுமை(Very High Poverty) காணப்படும் பகுதியாக தம்பகாமம் (KN/86), கிராம சேவகரும், உயர்வான வறுமை( High Poverty) இத்தாவில் (KN/92), கிராம சேவகரும், அரசர்கேணி (KN/91), சோறன்பற்று(KN/982), ஆகியன மிதமான வறுமை(Moderate Poverty) கொண்ட கிராம சேவகர் பிரிவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

.




(உரு-8.3)

### 8.4 நிதி மூலதனத்தின் இடம்சார் பாங்கு

நிதி மூலதனமானது வாழ்வாதாரக் குறிகாட்டிகளில் வறுமையை வெளிப்படையாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. செய்யும் தொழில்களை அடிப்படையாகக் கொண்டு குடும்பங்களின் நிதி தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ளலாம். ஆய்வுப்பிரதேசத்தில் ரூபாய் 5000 க்கு குறைவான வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை, ரூபாய் 5001 - 10000 வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை,அரச தொழில் புரிவோரின்


எண்ணிக்கை, சமுர்த்தி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை போன்ற குறிகாட்டிகள் தொடர்பாக நோக்கப்படுகிறது.

ரூபாய் 5000 க்கு குறைவான வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை ஆய்வுப்பிரதேசத்தில் 43% ஆகும். அவை தொடர்பாக நோக்கும்பொழுது, மிகஉயர்வான எண்ணிக்கையில் தம்பகாமத்தில் (KN/86), 30% மான குடும்பங்களும், உயர்வான எண்ணிக்கையில் இத்தாவில் (KN/92), 28% மான குடும்பங்களும், சோறன்பற்று (KN/82), 27% மான குடும்பங்களும், அரசர்கேணி (KN/91), 13%, மான குடும்பங்களும் வருமான ரீதியாக பின்னடைவான நிலையில் உள்ளனர்

ரூபாய் 5001 - 10000 வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை ஆய்வுப்பிரதேசத்தில் 43% ஆகும். இதனை நோக்கும் போது மிகஉயர்வான எண்ணிக்கையில் தம்பகாமத்தில் (KN/86), 49% மான குடும்பங்களும், உயர்வான எண்ணிக்கையில் இத்தாவில் (KN/92), 27% மான குடும்பங்களும், சோறன்பற்று (KN/82), 15% மான குடும்பங்களும், அரசர்கேணி (KN/91), 09%, மான குடும்பங்களும் வருமான ரீதியாக பின்னடைவான நிலையில் உள்ளனர்.

சமுர்த்தி பெறும் குடும்பங்கள் தொடர்பாக நோக்கும் போது ஆய்வுப்பிரதேசத்தில் 30% மான குடும்பங்கள் சமுர்த்தி உதவிபெறுவோராகக் காணப்படுகின்றனர். மிகஉயர்வான எண்ணிக்கையில் தம்பகாமத்தில் (KN/86), 47% மான குடும்பங்களும், உயர்வான எண்ணிக்கையில் சோறன்பற்று (KN/82), 24%மான குடும்பங்களும், இத்தாவில் (KN/92), 18% மான குடும்பங்களும், அரசர்கேணி (KN/91), 11%, மான குடும்பங்களும் வருமான ரீதியாக பின்னடைவான நிலையிலும் மற்றும் இங்கு பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள், அநாதைகள், விவசாயக்குடும்பங்கள் என்போருக்கு சமுர்த்தி உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன.

நிதி மூலதன கட்டளைக்கற்கள் ஒவ்வொன்றையும் அடிப்படையாகக் கெண்டு இடம்சார் பரம்பல் படத்தில்(உரு-7.4) காட்டப்பட்டுள்ளவாறு உயர்வான வறுமை( High Poverty) காணப்படும் பகுதிகளாகிய தம்பகாமம் (KN/86), இத்தாவில் (KN/92), சோறன்பற்று(KN/982), கிராம சேவகரும் குறைவான வறுமை(Low Poverty) கொண்ட கிராம சேவகர் பிரிவாக அரசர்கேணி (KN/91) அடையாளம் காணப்பட்டுள்ளது.




(உரு-8.4)

### 8.5 சமூக மூலதனத்தின் இடம்சார் பாங்கு


இவ் மூலதனப்பரம்பல் வறுமையை தணிப்பதற்கு மிக முக்கியமானதாகும். அந்த வகையில் சமூகசேவை நிறுவனங்களின் எண்ணிக்கை, சமூக உதவி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை என்பன தொடர்பாக நோக்கப்பட்டுள்ளது.

சமூக நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்பாக நோக்கும் போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியாகக் காணப்படுகின்றமையால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கக் கூடிய தன்மை காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசங்களான தம்பகாமத்தில் (KN/86), 43% மான சமூகசேவை நிறுவனங்கள் காணப்படுகின்றன இதனால் இங்கு நிலவும் உயர்வான வறுமையைக் குறைக்க வாய்ப்பாக அமையும். சோறன்பற்று (KN/82), 28%, மாக நடுத்தர அளவிலும், இத்தாவில் (KN/92), அரசர்கேணி (KN/91), 14% மான நிறுவனங்களும் காணப்படுகின்றன அவற்றின் தொழிற்பாடுகள் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

சமூக சேவை உதவிபெறுவோர் தொடர்பாக நோக்கும் போது தம்பகாமத்தில் (KN/86), 42% மானவர்கள் பெறுகின்றனர். இங்கு சனச்செறிவும் உயர்வாகக் காணப்படுகின்றது எனினும் வறுமையை தணித்துக்கொள்ளக்

கூடியதாக காணப்படும். அரசர்கேணி (KN/91), 32% மானவர்கள் சமூக உதவி பெறுகின்றனர் வறுமை உயர்வான நிலையிலே இங்கும் காணப்படுகின்றது. மேலும் சோறன்பற்று (KN/82), 16%,இத்தாவில் (KN/92) 10% மானவர்கள் உதவி பெறுகின்றனர்


சமூக மூலதன கட்டளைக்கற்கள் ஒவ்வொன்றையும் அடிப்படையாகக் கெண்டு வறுமையன் இடம்சார் பரம்பல் காட்டப்பட்டுள்ளது.




. (உரு-8.5)

#### 0.9. வறுமை மதிப்பீடும் ஆய்வு முடிவுகளும்

வாழ்வாதார மூலதனங்கள் ஐந்தையும் ஒன்றினைத்து வறுமை மதிப்பீட்டு படம் உருவாக்கப்பட்டுள்ளது. ஐந்து மூலதனத்தையும் பலநியமப்பகுப்பாய்விற்கு உட்படுத்தியதன் மூலம் ஒவ்வொரு மூலதனமும் இணைக்கப்பட்டு நிறையிட்டு அவற்றினை அடிப்படையாகக் கொண்டு இறுதிப்படம் உருவாக்கப்பட்டுள்ளது தொடர்ந்து வறுமையின் இடம்சார்ந்த பரம்பல் தன்மையானது வாழ்வாதாரச்சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப்பிரதேசத்தில் எவ்வாறு பரம்பிக்காணப்படுகிறது என நோக்குவாம். தம்பகாமம் (KN/86), இத்தாவில் (KN/92), கிராமசேவகர் பிரிவுகளில் வறுமையின் பரம்பல்தன்மை உயர்வான நிலையில் காணப்படுவதனை அவதானிக்கலாம் மேலும் அரசர்கேணி(KN/91), சோறன்பற்று (KN/82), ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் நடுத்தர அளவிலான வறுமையில் வாழ்கின்றமையை அவதானிக்கலாம். இதனை உரு 7.6 மூலம் அவதானிக்கலாம். கடந்தகால யுத்தத்தினால் இப்பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டு வறுமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பல்வேறு பட்ட உதவிகள் அம்மக்களிற்கு வழங்கப்பட்ட போதிலும் அவை ஏன் மக்கள் வறுமையை போக்கவில்லை என நோக்கும் போது அம்மக்கள் வாழ்வாதாரச்சொத்துக்களை பயன்படுத்தும் விதம் மக்கள் மத்தியில் வேறுபட்டுக்காணப்படுகின்றமையாகும்.




(உரு-8.6)

மேற்கொண்ட பகுப்பாய்வின்படி வாழ்வாதாரச்சொத்துக்கள் உயர்வாகக் காணப்படும் போது வறுமையின் தாக்கம் குறைவாகவும்இ வாழ்வாதாரச்சொத்துக்கள் நடுநிலையாகக் காணப்படும் சந்தர்பத்தில் வறுமையின் தாக்கம் நடுநிலையாகவும், வாழ்வாதாரச்சொத்துக்கள் குறைவாகக் காணப்படும் சந்தர்பத்தில் வறுமையின் தாக்கம் உயர்வாகவும் காணப்படுவதனை அவதானிக்கலாம். அந்த வகையில் ஒவ்வொரு மூலதனங்களையும் அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசத்தின் வறுமையினை அளவிடும் போது பௌதிக மூலதனத்தில் அரசர்கேணி(KN/91), இத்தாவில் (KN/92) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வறுமை உயர்வாகவும், சோறன்பற்று (KN/82), தம்பகாமம் (KN/86) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வறுமை மிதமான தன்மையிலும் காணப்படுகின்றது. இங்கு பௌதிக சொத்துக்கள் சார்ந்து குறிகாட்டிகளின் பரம்பல் தன்மை குறைவாகக் கொண்டிருக்கின்ற பகுதிகளில் கூடியளவான வறுமையினைக் காணலாம்.

மனித மூலதனத்தினை எடுத்து நோக்கும் பொழுது, சோறன்பற்று (KN/82), தம்பகாமம் (KN/86) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வறுமை உயர்வாகவும், அரசர்கேணி(KN/91), இத்தாவில் (KN/92), ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வறுமை மிதமான தன்மையிலும் காணப்படுகின்றது.

இயற்கை மூலதன இடம்சார் பரம்பலை நோக்கும் போது மிக உயர்வான வறுமை(Very High Poverty) காணப்படும் பகுதியாக தம்பகாமம் (KN/86) கிராசேவாகர் பிரிவும், உயர்வான வறுமை( High Poverty) காணப்படும் பகுதியாக இத்தாவில் (KN/92) கிராசேவாகர் பிரிவும், அரசர்கேணி (KN/91), சோறன்பற்று (KN/982), ஆகியன மிதமான வறுமை(Moderate Poverty) கொண்ட கிராம சேவகர் பிரிவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

நிதி மூலதன இடம்சார் பரம்பலை நோக்கும் போது உயர்வான வறுமை( High Poverty) காணப்படும் பகுதிகளாக தம்பகாமம் (KN/86), இத்தாவில் (KN/92), சோறன்பற்று (KN/982), உள்ளடங்குகின்றனர். குறைவான வறுமை (Low Poverty) கொண்ட கிராம சேவகர் பிரிவாக அரசர்கேணி (KN/91), அடையாளம் காணப்பட்டுள்ளது

சமூக சேவை உதவிபெறுவோர் தொடர்பாக நோக்கும் போது இத்தாவில் (KN/92), கிராம சேவகர் பிரிவுகளில் மிகஉயர்ந்தளவான வறுமையும் (Very High Poverty), தம்பகாமம் (KN/86), அரசர்கேணி (KN/91), ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் உயர்ந்தளவான வறுமையும் (High Poverty), சோறன்பற்று(KN/982), வறுமை குறைவான நிலையிலும் காணப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில், ஐந்து மூலதனங்களின் செல்வாக்கும் காணப்படுகின்றது. யுத்தப் பாதிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்தான மீள் குடியேற்றம் என்பன வாழ்வாதாரம் சார் பாதிப்புக்களினை ஏற்படுத்தின. இதனால் ஆரம்பத்தில் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை காணப்படினும், பல்வேறான அபிவிருத்தி தன்மைகளின் அடிப்படையில் ஓரளவான முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. வளப்பரம்பலின் சமமற்ற தன்மையானது இற்றைவரைக்கும் காணப்படுவதனை காண முடிகின்றது. அத்துடன் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பொருட்களின் விலையேற்றத்தினால் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதை இவ் ஆய்வினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. எனினும் இப் பகுதிகளில் வசதி படைத்த மக்களும் ஓரளவு பரவலாக முறையில் காணப்படுகின்றமை அவதானிக்க கூடியதாகவிருந்தது.

அத்துடன் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், முதியோர் குடும்பங்கள் என்பன அதிகமாகக் காணப்பவதனால், அவர்களினால் ஏனையவர்களைப் போன்று சாதாரண வாழ்க்கைத் தரத்தினை மேற்கொள்ள முடியாமல் இருப்பதும் அவதானிக்க முடிந்தது. குடிசை வீடுகள், அடிப்படை மலசலகூட வசதிகளற்ற வீடுகள், மிகக் குறைவான மாத வருமானம் பெறும் குடும்பங்கள், சொந்த பாவனை மற்றும் குடிநீர் தேவைக்கான கிணறுகளினைக் கொண்டிராத மக்கள் எனப் பலதரப்பட்ட வறுமை கொண்ட மக்கள் காணப்படுகினறனர். இவர்களின் வறுமைத் தணிப்பிற்கான திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருப்பினும் முழுமையாக சென்றடைவின்மையே காணப்படுகின்றது.

இவ் ஆய்வுப் பிரதேசத்தில் வறுமை முற்றாக இல்லாத பகுதிகளாக எவையும் அடையாளம் காணப்படவில்லை, அத்துடன் மிக உயர்வான வறுமை கொண்ட பகுதிகளாகவும் எவையும் அடையாளம் காணப்படவில்லை. இங்கு வழங்கப்படுகின்ற வறுமை ஒழிப்புத திட்டங்களானவை மக்களின் வறுமையை நிரந்தரமாக ஒழிக்க வழிசமைப்பனவாக அமையவில்லை. எனவே முற்றான வறுமை ஒழிப்பானது மக்களின் வாழ்வாதார சொத்துக்களின் திருப்தி நிலையினைப் பொறுத்தே அமைவதாகக் காணப்படுகின்றது. வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையிலேயே வறுமையின் இடம் சார் பரம்பலானது தீர்மானிக்கப் படுகிறது.

**10. பரிந்துரைகள்**

அந்த வகையில் வறுமையைக்குறைக்க வேண்டுமெனில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் மக்கள் மத்தியில் சரியான முறையில் சென்றடைய வேண்டும் செல்வந்தர்கள் தொடர்ந்து செல்வந்தர்களாகவும் வறியவர்கள் தொடர்ந்து செல்வந்தர்களாகவும் வறியவர்கள் வறுமையில் இருந்து மீண்டு கொள்ள முடியாது தொடர்ந்தும் வறியவர்களாகவே காணப்படுகின்றனர். விவசாயத்தை மேற்கொள்ளும் மக்கள் அதிகமாகக் காணப்படுவதனால்

குடும்ப அங்கத்தவர்களும் அதிகமாகக் காணப்படுகின்றனர். இதனால் விவசாயப்பொருளாதாரத்தை மாற்றியமைத்து விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்கள், கடன்கள், சலுகைகள் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும்.

இப் பகுதிகளில் சிறு கைத்தொழில் மையங்களினை ஏற்படுத்துவதோடு, உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களினை ஏற்படுத்திக் கொடுத்தல். அத்தோடு பனை உற்பத்திகள் தொடர்பான கைவினைசார் தொழிப்பயிற்சிகளினை வழங்கல் போன்ற செயற்றிட்டங்களினை கிராம அடிப்படையில் மேற்கொள்ளுதல். விவசாயம் மட்டுமின்றி சேவைத்துறை மூலமான வேலைவாய்ப்பினையும் அரச, அரச சார்பற்ற நிறுவனம் ஊடாக ஏற்படுத்திக்கொடுத்தல் மற்றும் நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் சுயதொழில் மேற்கொள்வதற்கான கடன் வசதிகளை குறைந்த வட்டியுடன் வழங்குவதற்கு வழிவகுத்தல்இ தொழில் சார் கல்விப்பயிற்ச்சிகளை மக்களுக்கு வழங்குதல்.

பெண்தலைமைத்துவ குடும்பங்களினைச் சேர்ந்த பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்களினை வழங்குதல், தொழில்சார் பயிற்சிகளினை வழங்குதல், தொழில் வாய்ப்புக்களினை ஏற்படுத்திக் கொடுத்தல், போன்ற செயற்றிட்டங்களினை மேற்கொள்வதுடன், வறுமை தணிப்பிற்காக மேற்கொள்ளப்படுகின்ற திவிநெகும, சமுர்த்தி போன்ற நிகழ்ச்சித்திட்டங்களில் இவர்களினை உள்வாங்குதல். பெண்களுக்கான தையல் சார் பயிற்சிகள், உபகரணங்கள் என்பவற்றை வழங்குதல்.

உட்கட்டமைப்பு சார்ந்த வசதிகளினை ஏற்படுத்திக்கொடுத்தல் குறிப்பாக கிராமங்கள் சார்ந்து போக்குவரத்து விருத்திகள், குடிநீர் வசதிகள், கல்விசார் வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்திக்கொடுத்தல். ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் பொதுகிணறு, பொதுமலசலகூடம் பயன்படுத்துபவர்களுக்கு அவற்றை வீட்டிலேயே பெற்றுக்கொள்ளும் வகையில் கடனுதவி நிகழ்ச்சித்திட்டங்களினை வழங்குதல், அல்லது அரசாங்கமானது பொதுகிணறு மற்றும் மலசலகூட வசதிகளினை பல்வேறு இடங்களில் அமைத்துக் கொடுத்தல்.

மந்தைவளர்ப்பிற்க்கு தேவையான வசதிவாயப்புக்கள் இங்கு காணப்படுகின்றமையால் ஆடு, மாடு, கோழி வளர்ப்பிக்கான ஊக்குவிப்புக்களினையும் ஏற்படுத்துதல். மேலும் வருமான மூலங்களான மரக்கன்றுகளினை விநியோகிக்கும் திட்டங்களினை மேற்கொள்வதோடு அவற்றுக்கான ஊக்குவிப்புக்களையும் வழங்குதல்.

மேலும் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளில் மானியம் வழங்கல், உரம் வழங்கள் மற்றும் வரட்சி நிவாரணம், விவசாய பொருட்களுக்கான களஞ்சிய சாலைகள் என்பனவற்றை ஏற்படுத்திக்கொடுத்தல். விவசாய நடவடிக்கைக்காக மழைநீர் சேமிப்புத்திட்டங்களினை ஏற்படுத்திக்கொடுத்தல், குளங்களை புனரமைப்புச்செய்தல் மற்றும் புதியகுளங்களை உருவாக்கல் போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் இரு போகங்களிலும் விவசாயத்தை மேற்கொள்வதன் மூலம் உற்பத்தியினை அதிகரிப்பதோடு மக்களின் வாழ்க்கைத்தரத்தினையும் உயர்த்திக்கொள்ள வாய்ப்பாக அமையும்.மற்றும் ஏனைய நிலங்களை மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் மாற்றியமைத்தல் குறிப்பாக அந்த நிலங்களில் சிறுதானியப்பயிர்களான பயறு, நிலக்கடலை, மற்றும் பழச்செய்கைகள், தெங்குச்செய்கைகள் போன்றவற்றினை அவ் நிலங்களில் பயிரிட்டு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல்.

எனவே இவ்வாறாக ஆய்வுப்பிரதேச வாழ்வாதாரச் சொத்துக்களை அடிப்படையாகக்கொண்டு அவற்றின் பரம்பல் தன்மையை அவாதானிப்பதனூடாக வறுமையை குறைத்துக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும்.

## Reference


Ahamed Labbe S. M., Fazeela M. F., (2014), ''வறுமையும் சமூகத்தாக்கங்களும் தொடர்பான பகுப்பாய்வு'' *Proceedings of the Second ARC, FMC, SEUSL*

சுபாஜினி உ., சுதாகர்க., (2015). ''வாழ்வாதார சொத்துக்களின் இடம்சார் பாங்கும் வறுமையின் பரிமாணமும்'', ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவை சிறப்பாகக் கொண்டது. *சிந்தனை, இதழ்-3, பக்கம்-55-68.*

Erenstein O., Helllion J., Chandra P., (2010) "Poverty mapping based on livelihood assets. A meso – level application in the indo – *Gengetic plains, India," Applied Geography 30,112-125*.

சுபாஜினி உ., (2015), ''மீள்குடியேற்றத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பிரச்சனைகள்'' (ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவினை சிறப்பாக கொண்ட ஆய்வு*), Kalam Journal vol.ix,2015 of south Eastern University of Sri Lanka..*